

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ.தாயார் திருமதி.தே.கண்ணம்மாள் மறைவையொட்டி கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் காந்தி நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். உடன் அ.நல்லதம்பி எம்.எல்.ஏ., இ.ஜி.சுகவனம், டேம் டி. வெங்கடேசன் மற்றும் கழக முன்னணியில் தோழர்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

### நெல்லையில் ரூ.1கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள

# அண்ணா விளையாட்டரங்கில் விளையாட்டுப் போட்டிகள்!

### சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு துவக்கி வைத்தார்! மேயர் கோ.ராமகிருஷ்ணன் பங்கேற்பு!

நெல்லை.ஆக.17-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 14.8.2025 அன்று தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் திருநெல்வேலி அண்ணா விளையாட்டரங்கத்தில் ரூ.1 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள பாராவிளையாட்டு மைதானத்தை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை அண்ணா விளை யாட்டரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு, மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், திருநெல்வேலி மாநகராட்சி மேயர் கோ. ராமகிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர்.ராஜு ஆகியோர் முன்னிலையில் குத்துவிளக்கேற்றி, பாரா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற விளையாட்டினை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வில் சட்ட பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்த தாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், துணை முதலமைச்சர் அவர்கள், விளையாட்டு துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும்,அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல். உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அதனடிப்படையில், இன்றையதினம் முதலமைச்சர் அவர்கள் மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பல்வேறு மாவட்டங்களில் சிறு விளையாட்டரங்கங்கள், பாராவிளையாட்டு மைதானங்கள், மாவட்ட விளையாட்டு வளாகம் மற்றும் மாணவர்களுக்கான ஹாக்கி விளையாட்டு முதன்மை நிலை மையத்தினை திறந்து வைத்துள் ளார்கள்.

அதன் ஒரு பகுதியாக, திருநெல்வேலி மாவட்டத்தில் அண்ணா விளை யாட்டரங்கத்தில் பாரா விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில்,பாராவிளையாட்டு அரங்கம்,அரைவட்ட திறந்தவெளி மேற்கூரை கொண்ட பாரா இறகுப் பந்து, உட்கார்ந்து விளையாடும் பாரா கையுந்து பந்து, பாரா டேபிள் டென்னிஸ்,பாரா போச்சியா (Boccia),பாரா டேக்வொண்டோ, பாரா ஜுடோ ஆடுகளம்,பாரா கோல்பால் (Goal ball), செஸ்,கேரம் ஆகிய விளையாட்டு களுக்கான பன்னோக்கு உள்விளையாட்டரங்கம், பாரா பளுதூக்குதல் அடங்கிய உடற்பயிற்சிக்கூடம்,சக்கர நாற்காலிகளுடன் அணுகும் வகையிலான சாய்வுதளம் கொண்ட ஆண்,பெண் இருபாலருக்கான கழிப்பறைகள் போன்ற பல்வேறு வசதிகளுடன் ரூ.1 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள பாரா விளையாட்டு மைதானம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பாரா விளையாட்டு பயிற்சிகளை மேற்கொண்டு இந்திய அளவிலும், உலகளவிலும் நடைபெறும் பாரா விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று திருநெல்வேலி மாவட்டத்திற்கும்,நமது மாநிலத்திற்கும் பெருமை சேர்க்குமாறு வேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு சட்டபேரவைத்தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

தொடர்ந்து,அண்ணா விளையாட்டரங்கத்தில் குளிர்சாதன வசதிகளுடன் கூடிய உடற்பயிற்சி கூடத்தினையும் திறந்து வைத்து, பார்வையிட்டார்.

நிகழ்வில் மண்டல முதுநிலை மேலாளர் சிவா, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் கிருஷ்ண சக்கரவர்த்தி மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் பாஸ்கர்,கனகராஜ்,சங்கர்நகர் பேரூராட்சி உறுப்பினர் முத்து ராஜா, பயிற்றுநர்கள், விளையாட்டு வீர, வீராங்கனைகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்

## இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றியச் செயலாளர் ஆ.லிவிங்ஸ்டன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, அவருக்குப் பதிலாக திரு. **ஜெ.மிலன்** (122/841, புதூர், பொழிக்கரை அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம்) அவர்கள் இராஜாக்கமங்கலம் தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 16-08-2025.

துரைமுருகன்
பொதுச்செயலாளர்
தி.மு.க.

---

### சென்னை தெற்கு மாவட்டம்

## சைதை கிழக்கு பகுதி - 172 அ வட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

சென்னை தெற்கு மாவட்டம், சைதை கிழக்கு பகுதி, 172அவது வட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர். செந்தில் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, அவருக்குப் பதிலாக, திரு. **வே.முருகன்** (அன்பில் தர்மலிங்கம் தெரு, வேளச்சேரி, சென்னை) அவர்கள் 172அவது வட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 16-08-2025.

துரைமுருகன்
பொதுச்செயலாளர்
தி.மு.க.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம். கமலநாதன்

### ஆகஸ்ட் 17 (1997)



தருமபுரி மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவர். சட்டமன்ற உறுப்பினராகவும், நாடாளுமன்ற இரு அவைகளிலும் உறுப்பினராகவும், ஊராட்சி ஒன்றியத் தலைவராகவும், தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவராகவும் பணியாற்றியவர்.

நெருக்கடி நிலை காலத்தில் மிசா கைதியாக ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர். கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

“ஓர் இனிய நண்பனை மட்டுமல்ல; இலட்சிய வீரனையும் இழந்தேன்” என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

---

### புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்

## அரிமளம் வடக்கு ஒன்றியம், அரிமளம் பேரூர் மாவட்ட பிரதிநிதி தேர்தல் தேர்தல் முடிவு

### தலைமைக் கழக அறிவிப்பு

“புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில் உள்ள அரிமளம் வடக்கு ஒன்றியம், அரிமளம் பேரூர் மாவட்டப் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட வெ.மணி அவர்கள் மறைவெய்திய காரணத்தால்; புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், அரிமளம் பேரூர், மாவட்ட பிரதிநிதி பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து, 2025 ஆகஸ்ட் 4 (திங்கட்கிழமை) அன்று ஒரு பொறுப்புக்கு ரூ.500/ வீதம் தலைமைக் கழகத்தில் கட்டணம் செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.""என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில் உள்ள அரிமளம் வடக்கு ஒன்றியம், அரிமளம் பேரூர், மாவட்ட பிரதிநிதி பொறுப்புக்கு ம. கரிகாலன் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், அரிமளம் வடக்கு ஒன்றியம்,

அரிமளம் பேரூர், மாவட்ட பிரதிநிதியாக

திரு. ம.கரிகாலன்
எண். 10, குட்டையன் செட்டியார் சந்து,
அரிமளம் 622 201, திருமயம் தாலுகா,


புதுக்கோட்டை மாவட்டம். அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 16-08-2025.

துரைமுருகன்
பொதுச்செயலாளர்
தி.மு.க.

---

# உன் பிறந்த நாள்! தமிழர்க்குச் சிறந்தநாள்!



மன்னர்மா மன்னர்தம் அரண்மனை மாடத்தில்
மகனாய்நீ தோன்ற வில்லை!
மாணிக்கத் தொட்டிலில் தாலாட்டுக் கேட்டுநீ
மணிவிழி மூட வில்லை!
தென்னவர் குலம்போற்றும் இசைவாணர் குடும்பத்தில்
செல்வமே பிறந்து வந்தாய்!
சேயான நாள்முதல் “தாய்மாமன்” தோளிலே
சிட்டுப்போல் தவழ்ந்து வந்தாய்!
பொன்மேனி வாடாமல் உன்னைத்தன் நெஞ்சுக்குள்
பொத்தியே அவர் வளர்த்தார்!
புகழ்மாலை சூடிநீ உலகத்தை வலம்வரப்
பொழுதெலாம் “கனா”வ ளர்த்தார்!
கன்னலில் கனிச்சாற்றில் மூழ்கிடும் வண்டுபோல்
கல்வியில் திளைக்க வைத்தார்!
“கண்ணா!நீ வாழ்க!”என அண்ணாவே உனைத்தேர்தல்
களத்திலே குதிக்க வைத்தார்!

எய்தாய்நீ இலக்கினை! வடக்குநம் தெற்கினை
ஏற்குமோர் வழிவ குத்தாய்!
ஏடாளும் வேந்தனாய் நாடாளு மன்றத்தில்
இலக்கணம் நீப டைத்தாய்!
மையத்தில் குவிந்துள்ள அதிகாரம் பற்றிநீ
மகத்தான நூல்வ டித்தாய்!
“மாநில சுயாட்சி”யின் உள்ளார்ந்த மாண்பினை
மாற்றாரும் உணர வைத்தாய்!
வையத்தில் வளர்ந்துவரும் நாடுகள் சார்பிலே
வாதாடி வெற்றி பெற்றாய்!
வாகான உரையினால் “தோகா”வின் மாநாட்டு
வரலாற்றில் நிலைத்து விட்டாய்!
செய்தக்கச் செய்கின்ற சான்றாண்மை மிக்கநின்
சீர்த்தியால் கீர்த்தி பெற்றாய்!
திருவாரூர் மண்வாசம், திருக்குவளை மலர்வாசம்”
திக்கெட்டும் கமழச் செய்தாய்!

தந்தை,தாய் வழிவந்த அன்பன்றோ! “உன்மாமன்”
தமிழ்தந்த அறிவும் அன்றோ!
“தாத்தாவும் பாட்டியும்” வீரத்தை ஈர்த்தைத்
தரவந்தப் பொலிவும் அன்றோ!
சிந்தனை நெற்றியின் மடிப்புகள் ஒவ்வொன்றும்
செயலுக்கு வியூகம் அன்றோ!
சிங்கம்நிகர் நடைகாணக் கண்கோடி வேண்டுமே!
“ திராவிடத் தீரம்” அன்றோ!
சந்தன நிறமன்றோ! தங்கத்தின் ஒளியன்றோ!
தனிஎழில் வதனம் அன்றோ!
“தலைவகிடு” அதில்கூடத் தலைவனைப் பின்பற்றும்
தலைமுடி அழகும் அன்றோ!
சுந்தரம் என்றாலே அழகென்று பொருள்என்று
சொல்வார்கள்! “தியாக ராஜ
சுந்தரம்” நீயன்றோ!அழகுக்கே அழகூட்டச்
சொல்தேவை இல்லை யன்றோ!

கலைஞரின் வளர்ப்புநீ! கலைஞரின் வார்ப்புநீ!
கலைஞரின் “ஞான நகல்”நீ!
கலைஞரை ஆயிரம் கவிஞர்கள் பாடலாம்!
கலைஞரின் பாடு பொருள்நீ!
கலைஞரின் நம்பிக்கை! கலைஞரின் மனசாட்சி!
கலைஞரின் மூளை பலம்நீ!
கடல்போலப் படைநூறு வந்தாலும் கலைஞர்க்குக்
களத்திலே யானை பலம்நீ!
அலையில்நீர்க் குமிழிபோல் இடையில்நீ பிரிந்ததை
அன்றாடம் எண்ணு கின்றோம்!
அருகில்நீ இல்லாத கலைஞரைப் பார்க்க,மனம்
ஆற்றாமல் விம்மி நின்றோம்!
சிலையில்நின் திருமுகம் ஒளிவிடும் காட்சியில்
சிந்தை,உடல் சிலிர்த்து நின்றோம்!
“சிறந்தநாள்! தமிழர்க்குன் பிறந்தநாள்!” என்றுன்னைச்
சிரம்தாழ்த்தி வணங்கு கின்றோம்!

... கவிச்சுடர் கவிதைப்பித்தன்

